**சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் ("கம்பனி") 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- கம்பனி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கம்பனியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 12 இன் 79, 80 மற்றும் 81 ஆம் பந்திகளின் பிரகாரம் வருமான வரி கணிப்பீடு தொடர்பான தகவல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் வருமான வரிக் கணிப்பீடு தொடர்பாக நிறுவனத்தால் வெளிப்படுத்தப்பட்ட வரி குறிப்பு சரியாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளில் உள்ளவறு வரிக் குறிப்பு காட்டப்பட்டிருந்தது. வருமான வரிக் கணிப்பீடு தொடர்பாக தேவையான குறிப்புக்களை வெளிப்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறையல்லாச் சொத்தின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும். எனினும் பெறுமானத்தேய்வு அறவீடு பூச்சியமாக உள்ள ரூபா 1,393,185,840 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்தம் செய்வதற்கும் நிதிக்கூற்றுக்களில் சரியான முன்கொண்டு செல்லும் பெறுமதியை காட்டுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எல்கேஏஎஸ் 16 இன் 79(ஆ) பந்தியின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. மேலும் தற்போது பெறுமானத்தேய்வு தொகைகள் வருடாந்தம் பரீட்சிக்கப்பட்டு பெறுமானத்தேய்வுச் சீராக்கங்கள் வருடாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரண அறிக்கை அவதானிப்பிற்காக சமர்ப்பிக்கப்பட முடியும். | இலங்கை கணக்கீட்டு நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) ரூபா 110,405,433 தொகை வட்டி வருமானமாக பெறப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வட்டி வருமானமாக காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 99,109,678 | முன்னைய ஆண்டுகளின் படி இது காணப்பட்டதால் வட்டி வருமானம் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. வட்டி வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது நிலையான வைப்புக்களின் | ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மாத்திரமே காட்டப்பட்டிருந்தது. ஆகையால் காசுப்பாய்ச்சல் கூற்று ரூபா 11,295,755 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | வருமானம், மற்றும் ஊழியர் கடன் வட்டி என்பன கணிப்பீட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தன. | |
| (ஆ) | ரூபா 394,252,692 பெறுமதியான நிலையான வைப்புக்கள் மீளாய்வாண்டின் போது வலையமைப்பு மூலம் காசாக்கப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் முதலீடுகளிலிருந்தான காசுப்பாய்ச்சலாக ரூபா 331,930,705 தொகை காட்டப்பட்டிருந்தது. இதன் விளைவாக ரூபா 62,321,987 தொகையான காசுப்பாய்ச்சல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டிருந்தவாறு நிலையான வைப்புக்களிற்கான மொத்த வட்டி வருமானத்தை சீராக்கிய பின்னர் காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக காட்டப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய ஏனைய பெறவேண்டியவைகளிற்காக வருமானக் கூற்றறிற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த ரூபா 3,380,610 நட்டக்கழிவு ஏற்பாடு காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் நட்டக்கழிவு ஏற்பாட்டிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | ஒரே கடன்பட்டோரின் ஒரே கொடுக்கல் வாங்கல்களிற்காக இரண்டு பேரேட்டுக் கணக்குகள் பேணப்பட்டிருந்ததுடன் அக் கடன்பட்டோரால் செலுத்தப்பட்ட ரூபா 2,427,600 தொகை ஒரு கணக்கிற்கு பதிவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக கடன்பட்டோர் மீதி மற்றும் நிறுத்தி வைத்த இலாபம் என்பன நிதிக்கூற்றுக்களில் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | குறித்த தொகை மொத்தக் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை பாதித்திருக்காததுடன் குறித்த தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | ஆண்டிற்குரிய கடன்பட்டோர் மீதிகள் சரியாக இனங்காணப்பட்ட பின்னர் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (உ) கணக்குகளிலிருந்து கடன்பட்டோர் கணக்கொன்றிற்கு கூடுதலாக மாற்றப்பட்ட ரூபா 2,780,184 தொகையை பதிவளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் வசந்தம் தொலைக்காட்சிக்குரிய தரகாக கழிக்கப்பட வேண்டிய ரூபா 878,870 தொகை கடன்பட்டோர் மீதியொன்றாக பதியப்பட்டிருந்தது. ஆகையால் கடன்பட்டோர் மீதி ரூபா 3,659,054 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | மேலதிகமாக பதிவு செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து ரூபா 2,780,184 தொகையை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். அத்துடன் ரூபா 878,870 தொகையை திருத்தம் செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | நிதியாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு சரியான மீதிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஊ) 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 1,037,763 பெறுமதிக்கு கொள்வனவு செய்யப்பட்ட 11 ஆங்கில திரைப்படங்களை கற்பனைச் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக முற்கொடுப்பனவு ஒன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அத் திரைப்படங்களில் 4 திரைப்படங்கள் 2015, 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது ஒளிபரப்பு செய்யப்பட்டிருந்ததுடன் ஒளிபரப்புச் செய்யும் உரிமையை சரிபார்த்த பின்னர் ஏனைய திரைப்படங்களை ஒளிபரப்புச் செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கற்பனைச் சொத்துக்களை நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) வலையமைப்பால் பின்பற்றப்பட்ட பெறுமானத்தேய்வு கொள்கை நிதிக்கூற்றுக்களில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 1,789,202 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்ததுடன் காட்டப்பட்ட விகிதங்கள் சரியாக பின்பற்றப்பட்டிருக்காததன் காரணமாக திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்களின் பெறுமதி ரூபா 900,941 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | (i) தளபாடம் மற்றும் பொருத்துக்களிற்குரிய பெறுமானத்தேய்வின் பிரகாரம் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன் கிரயத்தை விடக் கூடுதலாக பெறுமானத்தேய்வு செய்ய முடியாதிருந்தது.<br>(ii) 2020 ஆம் ஆண்டிற்கான கட்டிடங்களிற்கான பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்யும் போது குறித்த தொகையை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.<br>(iii) லகந்த வானொலியின் கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு தொடர்பாக முன்னைய ஆண்டில் காணப்பட்டதைப் போல் சரியான பெறுமானத்தேய்வு தொகை கணக்குகளிற்கு | நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட பெறுமானத்தேய்வுக் கொள்கையின் பிரகாரம் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்தது.<br><br>(iv) அலுவலக உபகரணத்தின் பெறுமானத்தேய்வு சரியாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்ததென குறிப்பிட முடியும்.<br><br>(v) பொறி மற்றும் இயந்திரங்கள் மற்றும் Trans meters தொடர்பாக பொறியியல் பிரிவின் பரிந்துரைகளை பின்பற்றி கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | |
| (ஏ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 7,193,321 தொகை எதிர் கொடுக்கல் வாங்கல்களை (Contra deals) கொண்டிருந்ததுடன் உரிய சேவைகளை பெற்ற பின்னர் அக் கொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கடன்பட்டோர் அதே தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கண்டறிந்த பின்னர் பதிவளிப்பதற்கும் கணக்குகளை தீர்ப்பனவு செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | எதிர் கொடுக்கல் வாங்கல் சேவைகளை பெற்ற பின்னர் கணக்கு பதிவுகள் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது ஏடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வசந்தம் தொலைக்காட்சியின் வாடிக்கையாளர் கடன்பட்டோர் மீதி ரூபா 82,896,053 தொகையாக காணப்பட்டதுடன் பட்டியல்களின் பிரகாரம் இது ரூபா 95,481,160 ஆக காணப்பட்டது. ஆகையால் ரூபா 12,612,107 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | கடன்பட்டோர் மீதி மற்றும் பட்டியல்களின் பிரகாரமான கடன்பட்டோர் மீதி ரூபா 95,481,160 ஆக காணப்பட்டதுடன் நட்டக்கழிவு அறிக்கையை தயாரிக்கும் போது கடன்பட்டோர் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்ட எதிர்மறை மீதிகளை அகற்றியமை ரூபா 12,612,107 வேறுபாட்டிற்கான காரணமாகும். | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்தக்கூடிய பட்டியல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும. |

### 1.5.4 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் தேறிய சொத்துக்கள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைவடைந்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நட்டங்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. அதற்கிணங்க ஆண்டிற்கான கம்பனியின் மொத்த நட்டம் ரூபா 582,560,996 ஆக காணப்பட்டது. | வான்கால விலைவீதங்களின் (ratings) பிரகாரம் நிறுவனத்தின் விலைவீதம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. ஆகையால் நட்ட நிலைமை ஏற்பட்டிருந்தது. | வான்கால விற்பனை வருமானத்தை அதிகரித்து நட்ட நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 61,398,230 பிற்போடப்பட்ட வருமானத்தில் 5 ஆண்டுகளை விடக் குறைந்த ரூபா 18,248,325 மீதி, 05 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையேயான மீதி ரூபா 20,859,250 மற்றும் 10 ஆண்டுகளை விடக் கூடிய ரூபா 22,290,655 மீதி என்பன உள்ளடக்கப்பட்டிருந்தது. எனினும் இம் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஆண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் பரிந்துரைகள் மீது இந்த ஆண்டின் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 14,641,728 தொகையான 5 ஆண்டுகளை விடக் கூடிய எதிர் கொடுக்கல் வாங்கல் மீதி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 26,102,278 எதிர் கொடுக்கல் வாங்கல் கடன்பட்டோர் மீதியில் உள்ளடக்கப்பட்டிருந்தது. உரிய சேவைகளை பெற்றுக் கொள்ளாமல் அத் தொகைக்காக நட்டக்கழிவிற்கான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இவ் எதிர் கொடுக்கல் வாங்கல்களிற்குரிய விலைச்சிட்டைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் நிதிப் பிரிவிற்கு பெறப்பட்டிருக்கவில்லை. ஆகையால் கணக்குகளிற்கு அப் பெறுமதிகளை எடுப்பதற்கும் ஏனைய மேலதிக நடவடிக்கைகளிற்கும் பிரச்சனையான நிலைமையொன்று காணப்பட்டது. | உரிய சேவைகளை பெற்றுக் கொள்வதற்கும் எதிர் கொடுக்கல் வாங்கல் கடன்பட்டோர் மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 118,338,166 வாடிக்கையாளர் முற்பண மீதியில் 10 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 24,347,719 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிலும் அம் மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவ் வாடிக்கையாளர்களை சரியாக இனங்கண்ட பின்னர் பின்னர் இந்த ஆண்டில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு கடன் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நீண்ட காலத்திற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்டிருந்த மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 5 ஆண்டு காலப்பகுதிக்கு மேலாக வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத 433 காசோலைகளின் மொத்தப் பெறுமதி ரூபா 3,888,051 ஆக காணப்பட்டதுடன் 2 ஆண்டுகளிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குரிய ரூபா 5,494,358 பெறுமதியான 550 காசோலைகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்காததுடன் இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தன. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட இரத்துச் செய்யப்பட்ட காசோலைகளை பதிவளிப்பதற்கும் மீண்டும் வருமானத்திற்கு எடுப்பதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பான சீராக்கங்கள் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |
| (இ) 3 ஆண்டுகளான ரூபா 974,653 உரிமை கோரப்படாத செலுத்த வேண்டிய மீதி மற்றும் 2012 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 37,538,476 தொகையான ஏனைய செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த செலுத்த வேண்டிய தொகை தொடர்பான தகவல்களை பெற்று அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பாக சரியான உறுதிப்படுத்தலொன்றை பெற்ற பின்னர் கணக்குகளிற்கு எடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நீண்டகாலத்திற்கு மேலாக முன்கொண்டுவரப்பட்ட மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) 2016 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த | குறித்த மீதிகள் தொடர்பாக கடன் கட்டுப்பாட்டுப் பிரிவிற்கு | கொடுப்பனவுகளை மேற்கொண்ட பின்னர் |

| | | |
|---|---|---|
| ரூபா 1,416,677 தொகையான இனங்காணப்படாத செலவு மீதி மற்றும் 3 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 639,600 கூட்டுமொத்தமான 86 மீளளிக்கத்தக்க வைப்புக்கள் என்பவற்றை தீர்ப்பனவு செய்வதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அக் கடன்கொடுத்தோரை சரியாக இனங்கண்ட பின்னர் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கணக்குகளில் சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான வரைபு வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது இவ் அறிக்கைத் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியதன் காரணமாக சில நாட்கள் தாமதமொன்று ஏற்பட்டதுடன் 2020 மார்ச் 12 இல் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இது சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய காலப்பகுதியினுள் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) 2015 மே 25 ஆம் திகதிய 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கை | மூன்று தனிநபர்கள் காலத்திற்குக் காலம் வலையமைப்பின் தலைவர் பதவிக்காக சேவையாற்றியிருந்ததுடன் பதவிக்கு உரித்தான எரிபொருள் படி 170 லீற்றாகளாக காணப்பட்ட போதிலும் அவ் எல்லையை விஞ்சி 455 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. மேலும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர், பொது முகாமையாளர் | அலுவலக கடமைகளிற்காக எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | (மேவுகை) மற்றும் பிரதி பொது முகாமையாளர் (செய்திகள் மற்றும் நடைமுறை விவகாரங்கள்) ஆகியோரிற்கு அங்கீகரிக்கப்பட்ட எல்லையை விஞ்சி முறையே 1518 லீற்றர், 1716 லீற்றர் மற்றும் 1640 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தன. | | |
| (iii) | 2019 திசெம்பர் 09 ஆம் திகதிய பிஈடி 03/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக ரூபா 7,986,000 தொகை மீளாய்வாண்டின் போது மிகையூதியமாக வலையமைப்பின் ஊழியர்களிற்கு செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபன அரசியலமைப்பின் பிரகாரமும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மீதும் இப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் இத்தகைய முறைகள் ஊடாக பதவியணியினரை ஊக்குவிப்பதற்கு எதிர்பாக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |

(ஆ) அரச நிதிச் சுற்றறிக்கை

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 2013 சனவரி 31 ஆம் திகதிய 02/2013 ஆம் இலக்க சுற்றறிக்கை | அரசாங்க E கொள்கையின் பிரகாரம் முற்கொடுப்பனவு வங்கி அட்டையை பெற்றுக்கொள்ள முடிந்த போதிலும் வலையமைப்பால் இலங்கை வங்கியிடமிருந்து கடன் அட்டையொன்று பெறப்பட்டிருந்ததுடன் வங்கி முற்கொடுப்பனவு அட்டையின் ஆகக் கூடிய எல்லை ரூபா 100,000 ஆக காணப்பட்ட போதிலும் பெற்றுக்கொண்ட கடன் அட்டையின் ஆகக்கூடிய எல்லை ரூபா 900,000 ஆக காணப்பட்டது.. மேலும் சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் | இக் கொடுப்பனவுகள் முற்கொடுப்பனவு அட்டையால் செலுத்தப்பட முடியாதிருந்ததன் காரணமாக உரிய கால தேவையை கருத்தில் கொண்டு பணிப்பாளர் சபை அங்கீகாரம் மீது அவ் அட்டை இரத்துச் செய்யப்பட்டு கடனட்டையொன்று பெறப்பட்டிருந்தது. இது முற்கொடுப்பனவு அட்டையொன்றாக காணப்படாததால் பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் செலவின தன்மை தீர்மானம் மீது ஆகக் கூடிய எல்லை பெறப்பட்டிருந்தது. அனைத்து | இந் நிறுவனம் ஒரு பொதுக் கம்பனியாகும் . ஆகையால் சுற்றறிக்கை அறிவுறுத்தல் களின் பிரகாரம் நடவடிக்கைக ள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முற்கொடுப்பனவு அட்டைகள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டு நடைமுறைகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இவ் அட்டை தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | செலவினங்களையும் பரீட்சிப்பதற்கு உள்ளகக் கணக்காய்விற்கு குறிப்பிடப்பட்டுள்ளது.. |

**1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பெறுமதி சேர் வரியின் பெறுமதி ரூபா 9,914,876 ஆக காணப்பட்ட போதிலும் பெறுமதி சேர் வரி அறிக்கைகளின் பிரகாரம் இது ரூபா 4,532,296 ஆக காணப்பட்டது. இதன் விளைவாக பெறுமதி சேர் வரி ரூபா 5,382,580 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | வருமானத்தின் பிரகாரம் ஆண்டின் போது வரிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றதுடன் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது ஏற்படும் சீராக்கங்கள் வருகின்ற மாதங்களில் செலுத்தப்படுகின்றன. மேலும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் உரிய காலப்பகுதிகளில் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம். | பெறுமதி சேர் வரி சரியாக கணிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 571,884,034 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 627,610,711 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 55,726,677 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஏனைய வருமானம் 41 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 16,001,972 ஆல் அதிகரித்தமை மற்றும் நிகழ்ச்சித்திட்ட செலவினம் 16 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 97,509,232 ஆல் குறைவடைந்நதமை என்பன மீளாய்வாண்டின் நிதி விளைவுகளிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான இலாபத்தன்மை விகிதங்கள் மற்றும் திரவத்தன்மை விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| இலாபத்தன்மை விகிதங்கள் | 2019 | 2018 |
|---|---|---|
| | % | % |
| மொத்த இலாப விகிதம் | 55 | 49 |
| தேறிய இலாப/(நட்ட) விகிதம் | (0.5) | (52) |

| திரவத்தன்மை விகிதங்கள் | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் (தடவைகள்) | 02 | 03 |
| விரைவு விகிதம் (தடவைகள்) | 02 | 03 |

2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான மொத்தலாப விகிதம் 06 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் பற்றாக்குறை 51.5 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பன 01 தடவையால் குறைவடைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) இழப்பீடாக ரூபா 615,325,000 தொகையை கோரி 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வலையமைப்பிற்கு எதிராக பதினெட்டு சட்ட வழக்குகள் வெளித்தரப்பினாகளால் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அவ் வழக்குகளிற்காக ரூபா 3,502,115 தொகை ஏற்பட்டிருந்தது. | செய்தி ஒளிபரப்பு செய்தல், திரைப்படங்களை ஒளிபரப்பு செய்தல் மற்றும் அவற்றின் பிரச்சனைக்குரிய நிலைமைகளின் போது ஊழியர்களால் சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அனைத்து வழக்குகள் தொடர்பாகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வலையமைப்பிற்கான நட்டங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 14,951,343 தொகையை அறவீடு செய்வதற்காக வாடிக்கையாளர் கடன்பட்டோரிற்கு எதிராக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பனியால் ஒன்பது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 3,075,357 தொகையான கடன்பட்டோர் கண்டறிப்பட முடியாதிருந்ததால் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. | வெற்றிகரமாக வணிகத்தை பேணுவதற்காக நல்லுறவையும் சட்ட நடவடிக்கைகள் தொடர்பான செலவினங்களையும் பேணுவது அவசியமாகும். ஆகையால் சட்ட நடவடிக்கைகளிற்காக குறிப்பிடுவதற்கு முன்னர் ஒவ்வொரு சாத்தியமான நடவடிக்கையும் எடுக்கப்படுகின்றன.<br><br>நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன்களில் 98 சதவீதத்தை | தாமதமின்றி கடன்களை அறவீடு செய்வதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அறவீடு செய்வதற்கு மாத்திரமே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மிகுதியை அறவீடு செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சட்டப் பிரிவிற்கு குறிப்பிடப்படுகின்றன. மேலும் இப் பெறுமதி 2001 ஆம் ஆண்டிலிருந்தான மீதிகளை கொண்டிருந்ததுடன் இத் தொகை மொத்த கடன் விற்பனையில் 1 தொடக்கம் 2 வரையான சதவீதத்திற்கு இடைப்பட்டிருந்ததென தயவுடன் அறியத் தருகின்றோம். சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான கடுமையான நடத்தை வருமானத்தை விரைவாக குறைக்கக்கூடும். | |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது வைப்புச் செய்யப்பட்ட குறுங்கால மற்றும் நீண்டகால நிலையான வைப்புக்கள் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வலையமைப்பால் முறையே ரூபா 326,513,275 மற்றும் ரூபா 604,748,994 ஆக காசாக்கப்பட்டிருந்தன. இதன் விளைவாக நிலயான வைப்புக்கள் முறையே 14 சதவீதம் மற்றும் 39 சதவீதத்தாலும் வட்டி வருமானம் முறையே 15 சதவீதம் மற்றும் 31 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன. | நிறுவன காசுப்பபாய்ச்சலின் சாதகமற்ற நிலைமை காரணமாக அந் நிலையான வைப்புக்கள் காசாக்கப்பட வேண்டியிருந்தன. | நிறுவனத்தின் நிதி நிலைமையை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) இருபத்தொரு தொலைக்காட்சி நாடகங்கள் மீளாய்வாண்டின் போது ஐரீனன் அலைவரிசையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதில் | தொகைக்காட்சி நாடகங்களை பூர்த்தி செய்வதில் தனியார் அலைவரிசைகள் பிரதான பங்கு வகிக்கின்றதால் | பார்வையாளர்களிடமிருந்து அதிக வரவேற்பை எதிர்பார்க்கக்கூடியவாறு நாடகங்களை ஒளிபரப்புவதன் மூலம் |

| | | |
|---|---|---|
| 13 தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து ரூபா 51,967,769 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஒவ்வொரு தொலைக்காட்சி நாடகத்திற்காகவும் இலாபம் உழைக்க முடியாதிருந்தது. எனினும் அரச நிறுவனமொன்றாக பார்வையாளர்களிற்கான உயர்ந்தளவு ரசனைக்கு நாங்கள் பொறுப்பாக உள்ளளோம். ஆகையால் நட்டங்கள் ஏற்படுகின்ற போதிலும் உயர் தரத்திலான தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்பு செய்ய வேண்டும். | நட்டங்கள் தவிர்க்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் விபரமான பெறுகை திட்டம் எதிர்வருகின்ற ஆண்டிற்காக தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டம் 5 மாத தாமதத்துடன் 2019 மே 28 இல் வலையமைப்பால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் அக் காலப்பகுதியினுள் ரூபா 8.84 மில்லியன் மொத்தப் பெறுமதியில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | உரிய பிரிவுகளால் உரிய காலப்பகுதியினுள் வழங்கல் பிரிவிற்கு தேவையான தகவல்கள் வழங்கப்படாததன் காரணமாக 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தை சமர்ப்பித்தல் 2019 மே வரை தாமதமாகியிருந்தது. 2019 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் தேவைப்பாட்டிற்காக பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் அக் காலப்பகுதியினுள் கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) தாமதமான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் ரூபா 232 மில்லியன் பெறுமதியான 45 பெறுகை நடவடிக்கைகள் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அப் பெறுகை நடவடிக்கைகளில் 10 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 20 மில்லியன் பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் மாத்திரமே 2019 ஆகஸ்ட் 30 வரை பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | நிறுவனத்தின் நிதிச் நிக்கல்கள் காரணமாக பெறுகை மிகவும் குறைந்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிதி நிலைமையை கருத்தில் கொண்டு நிறுவனத் தேவைப்பாட்டிற்கு முன்னுரிமையளித்து பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.3.2(இ) பிரிவிற்கு முரணாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்வதற்கு முன்னர் ரூபா 3,549,580 பெறுமதியான பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரீட்சிப்பின் போது அவதானிக்கப்பட்டது. | நிறுவன செயற்பாடுகளின் அவசர தேவைகளிற்காக முத்திரையிடப்பட்ட கூறுவிலைகளை கோரும் போது முறையை பின்பற்றுவது சிக்கலாக காணப்பட்டது. எனினும் போட்டிக் கூறுவிலைகள், வெளிப்படைத் தன்மையை பாதுகாத்தல், கேள்வி மதிப்பீட்டுக் குழுக்களின் பரிந்துரைகள் மற்றும் பெறுகைக் குழுவின் அங்கீகாரங்களின் கீழ் பெறுகைககளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மே 8 ஆம் திகதிய டிஎம்எஸ்/1590/விஓஎல் II ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பிற்காக பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் அவை தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சோப்பு திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி வரைபு அங்கீகாரத்திற்காக 2020.07.14 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்டிருக்காத செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்கு ஆட்சோப்பு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சம்பளங்கள் மற்றும் படிகளாக ஆண்டின் போது ரூபா 550,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட | 2019.05.27 ஆம் திகதிய எம்எம்/எம்எஸ்/எஸ்ரீஏஎவ்எவ்/2019 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வெகுஜன ஊடக அமைச்சால் இந் நியமனம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2015.06.17 ஆம் திகதிய பிஈடி/03/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உள்ளடக்கப்பட்ட பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட |

| | | | |
|---|---|---|---|
| | ஆட்சோப்புத் திட்டமின்றி 7 பதவிகளிற்கு ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் இரண்டு பதவிகளிற்கு பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | செயற்பாட்டு பணிப்பாளரிற்கு ரூபா 75,000 மாதாந்த படி செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 327/09 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம் உபசரணைப் படிகளாக ரூபா 25,000 தொகையும் தொலைபேசி படிகளாக ரூபா 10,000 தொகையும் மாதாந்தம் செலுத்தப்பட்டிருந்தன. | வேண்டும். |
| (இ) | உத்தியோகத்தரொருவர் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் ஒப்பந்த அடிப்படையில் சந்தைப்படுத்தல் முகாமையாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | உத்தியோகத்தரொருவர் முன்னாள் தலைவரின் அறிவுறுத்தல்கள் மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் என்பவற்றின் மீது ஒப்பந்த அடிப்படையில் இப்பதவிக்கு ஆட்சோப்பு செய்யப்பட்டிருந்தார். | நிரந்தர பதவியணியினரின் பதவிகளிற்கு நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | முறையான நியமனத்தை பெற்றுக்கொள்ளாமல் 2018 நவம்பர் 07 ஆம் திகதியிலிருந்து நிதி முகாமையாளர் பதவிக்காக வலையமைப்பின் கணக்காளர் பதவியிலிருந்த பெண் உத்தியோகத்தரொருவர் பணியாற்றியிருந்தார்.<br>வலையமைப்பின் பிரதி பொது முகாமையாளர் நிதி பதவி 2017 யூலையிலிருந்து வெற்றிடமாக காணப்பட்டதுடன் மேற்படி குறித்த உத்தியோகத்தர் 2019 யூன் 21 தொடக்கம் அப் பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். 2018 நவம்பர் 07 தொடக்கம் 2019 யூலை 31 வரையான காலப்பகுதிக்கு இரண்டு பதவிகளிற்கான பணிகளிற்காக பதிற்கடமை படி மற்றும் எரிபொருள் படியாக ரூபா 477,086 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அவர் நிதி முகாமையாளர் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளதுடன் இறுதித் தீர்மானம் வரும் வரை பிரதி பொது முகாமையாளர் பதவியின் பதிற்கடமைக்காக | 2018.11.07 தொடக்கம் பிரதி பொது முகாமையாளர் (நிதி) பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக கணக்காளர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.<br><br>தாபன விதிக் கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 12.5.4 ஆம் பிரிவின் பிரகாரம் பொது முகாமையாளர் (நிதி) பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக அவரிற்கு ரூபா 9,635.83 மாதாந்த படி செலுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான இப் படிக் கொடுப்பனவு 328/35 ஆம் இலக்க சபைத் தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.<br><br>332/25 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் பொது முகாமையாளர் (நிதி) பதவியின் கடமைகளை மேவுகை செய்வதற்காக அவரை நியமனம் செய்வதற்கு பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | ஆட்சேர்ப்புக்கள் முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

ரூபா 61,809 சம்பளம் மற்றும் ஏனைய படிகளை செலுத்துவதற்கும் ரூபா 9,635 மாதாந்த படியை செலுத்துவதற்கும் 2019 யூலை 30 ஆம் திகதிய 328/35 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2019 செப்தெம்பர் 03 ஆம் திகதிய 329/14 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் பணிப்பாளர் சபையால் இந் நியமனம் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பாக பெறப்பட்ட அகைத்து படிகளும் சட்டவிரோதமானது என குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க இந் நியமனம் பிரச்சனைக்குரியதாக காணப்பட்டது.